## தமிழ்நாடு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**அனுப்புநர்**

திருமதி. மா. ஆர்த்தி,இ.ஆ.ப
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை - 600006.

**பெறுநர்**

முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண் : 2349/ஆ2/நா.மு- 46 /ஒபக/2023, நாள்:29.12.2023**

**பொருள் :** நான் முதல்வன் - ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி - உயர்கல்வி வழிகாட்டி குழு (Career Guidance Cell) - அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் - வருகின்ற ஜனவரி மாதம் 05.01.2024 வெள்ளிக்கிழமையன்று அன்று நடைபெறவிருக்கும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் - நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் பங்குபெறுதல் - சார்பு.

**பார்வை:** மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந. க. எண் :1680/A11/பமேகு/ஒபக/2023 ,நாள் : 22/12/2023

********

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல் / ஆலோசனை குழுவானது (Career Guidance Cell ) கடந்தாண்டு மே மாதம் 06.05.2023 அன்று முதல் செயல்பட்டு வருகின்றது. அதனைத் தொடர்ந்து, இக்கல்வியாண்டில் பயிலக்கூடிய மாணவர்கள் உயர்கல்விக்கு செல்ல பல்வேறு முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடச்சியாக, உயர்கல்வி வழிகாட்டி குழுவில் ஒரு உறுப்பினராக செயல்பட இருக்கின்ற நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் அனைவரும் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் வருகின்ற ஜனவரி மாதம் முதல் பள்ளிகளுக்கு வந்து தன்னார்வப் பணி செய்யவிருகின்றார்கள். அதில் முதற்கட்டமாக, வருகின்ற ஜனவரி மாதம் 05.01.2024 வெள்ளிக்கிழமையன்று அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் நடைபெறவிருக்கும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் கலந்து கொள்வார்கள். அவர்களின் பங்களிப்பானது மிகவும் இன்றியமையாதது. ஆகவே, கீழ்காணும் நெறிமுறைகளை பின்பற்றுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலரின் பொறுப்புகள் :

- ஜனவரி மாதம் முதல் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் பள்ளிக்கு வந்து செயல்படவிருக்கும் செயல்பாடுகள் இணைப்பு – 1இல் வழங்கப்பட்டுள்ளது.
- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களை அக்கூட்டத்தில் அறிமுகம் செய்தல் வேண்டும்.
- அதனைத் தொடர்ந்து, இக்கல்வியாண்டில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடுவதற்கான அமர்வுகளை சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- பள்ளிக்கு வருகின்ற நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களின் விவரங்களை QR Code -இன் வாயிலாக உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் / தலைமை ஆசிரியர் பதிவு செய்தல் வேண்டும்.
- இத்தகவல்களை அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளபடுகிறார்கள்.
- இச்செயல்பாடுகள் அனைத்து பள்ளிகளிலும் நடைபெறுவதை உறுதி செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு** – 1 பள்ளிச் செயல்பாடுகளில் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களின் பங்கு சார்ந்த விவரங்கள்

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

நகல்:

1. இயக்குநர், பள்ளிக் கல்வி துறை
2. அனைத்து மாவட்ட தொடர்பு அலுவலர்கள் - பள்ளிக் கல்வி துறை வழியாக

இணைப்பு – 1

**(பள்ளிச் செயல்பாடுகளில் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களின் பங்கு சார்ந்த விவரங்கள்)**

| வ. எண் | செயல்பாடு | தற்காலிகமான தேதி |
|---|---|---|
| 1 | **பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் கலந்துக் கொள்ளுதல் :**<br>1. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு சென்று நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் பங்கு பெறுதல்.<br>2. பள்ளிகளுக்கு சென்று 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களிடம் அறிமுகம் செய்தல் மற்றும் உயர்கல்வி சார்ந்து கலந்துரையாடுதல் | 05.01.2024 |
| 2 | **உயர்கல்வி விருப்ப பாடம் தெரிவு செய்யும் செயல்பாடு :**<br>இணைய தளத்தின் வாயிலாக பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களின் உயர்கல்வி விருப்பப் பாடங்கள், உயர்கல்விக்கு தேவையான ஆவணங்கள் குறித்த விபரங்களை சேகரித்து நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் பதிவு செய்வார்கள்.<br>அவற்றிற்கான EMIS இணையதள இணைப்பு மற்றொரு சுற்றறிக்கையில் வழங்கப்படும். | 22.02.2024<br>- 26.02.2024 |
| 3 | **உயர்கல்வி வழிகாட்டி முகாம்:**<br>1. பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் வெளிவந்த பின் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு உயர்கல்வி கல்லூரி சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்வதற்கு உதவி செய்தல்.<br>2. பொதுத் தேர்வில் தேர்ச்சி அடையாத/ தேர்வு எழுதாத மாணவர்களுக்கு மறு தேர்விற்கு விண்ணபிக்க உதவி செய்தல். | 08.05.2024 -<br>17.05.2024 |
| 5 | **மாணவர்களின் இல்ல நேர்காணல்:**<br>கல்லூரிக்கு மற்றும் மறு தேர்வுக்கு விண்ணப்பிக்காத / இடை நின்றமாணவர்களின் இல்லங்களுக்கே சென்று உயர்கல்விக்கான முக்கியத்துவத்தை கூறி உயர்கல்விக்கு விண்ணப்பிக்க செய்தல். | 13.05.2024<br>- 17.05.2024 |
| 6 | **உயர்வுக்கு படி & கல்லூரிக் கனவு :**<br>உயர்கல்வி சார்ந்துமாவட்ட அளவில் நடைபெறவிருக்கும் முகாமில் தன்னார்வ பணி செய்தல் . | ஜூன் ஜூலை 2024 |

28/12/23